செ.வெ.எண்: 414 4.6.08

## கணினி மேம்பாடு மற்றும் நவீனமயமாக்குதல் வாயிலாக சேவைகளின் தரத்தினை மேம்படுத்துதல்

தமிழ் நாட்டில் அதிவேக வாகன பெருக்கத்தால், வாகன பதிவுகள் பராமரித்தல் மற்றும் வாகன சம்பந்தப்பட்ட தணிக்கைகள் மேற்கொள்ளும் பணிச்சுமை அதிகரித்து வரும் இக்காலகட்டத்தில் பணிகளை திறம்பட செய்திடவும், பொதுமக்களுக்கு துரிதமாக சேவைகளை செய்திடவும், இத்துறையில் உள்ள முக்கியப் பணிகளை கணினிமயமாக்க முடிவுசெய்து 1999 முதல் பணிகள் படிப்படியாக கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. தற்பொழுது அனைத்து 53 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 45 போக்குவரத்து பகுதி அலுவலகங்கள், 7 மண்டல அலுவலகங்கள், போக்குவரத்துத் துறை தலைமை அலுவலகம், மாநில போக்குவரத்து தீர்ப்பாயம் ஆகியவற்றில் கணினிமயமாக்கப்பட்டு பொதுமக்களுக்கு தேவையான ஓட்டுனர் உரிமம் வழங்கல், அனுமதி வழங்கல், வாகனப் பதிவுச் சான்று வழங்கல், தகுதிச் சான்று வழங்கல், வரி செலுத்துதல் ஆகிய சேவைப் பணிகள் செய்யப்படுகிறது. இப்பணிகள் அனைத்தும் தேசிய தகவல் மையம் தயாரித்துள்ள ''வாகன்'' மற்றும் ''சாரதி'' மென்பொருள் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் போக்குவரத்துத் துறை பகுதி அலுவலகங்களுக்கும் அகண்ட அலைவரிசை வசதி அளிக்கப்பட்டு, விரைவில் தேசிய தகவல் மையம், போக்குவரத்து ஆணையர் அலுவலகம் மற்றும் பிற தொடர்புடைய துறைகளான காவல் துறை, மாநில குற்ற ஆவண கூடம் மற்றும் இதர அலுவலகங்களும் அகண்ட அலைவரிசையுடன் இணைக்கப்படும்.

## விரைவுக்க அட்டை (SMART CARD)

அரசு விரைவுக்க அட்டை முறையை அறிமுகப்படுத்திட கொள்கை முடிவெடுத்து, சென்னை (தெற்கு), கடலூர் மற்றும் சிவகங்கை வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் முன்னோடித் திட்டமாக செயல்படுத்துதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## பிரத்யேகமான பழகுநர் ஓட்டுநர் உரிமம் வழங்கும் மையம்

கணினி மூலம் பழகுநர் உரிமம் வழங்கிடும் முறை தற்போது 21 வட்டாரப்போக்குவரத்து / பகுதி அலுவலகங்களில் அமல் படுத்தப்பட்டுள்ளது. மேலும் 13 அலுவவகங்களில் விரைவில் நிதி ஒதுக்கீடு பெற்று இப்பணி தொடங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் பழகுநர் உரிமம் வழங்கும் நேரம் தற்பொழுது மாலை 4.00மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

## அனைத்து அலுவலகங்களையும் இணைவமைத்தல்/ தொடரமைப்பு

அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களுக்கும் அகண்ட அலைவரிசை வசதி அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் தேசிய தகவல் மையம், மாநில போக்குவரத்து அதிகாரி அலுவலகம், மற்றும் பிற தொடர்புடைய துறைகளான காவல் துறை, மாநில குற்ற ஆவண கூடம் மற்றும் இதர அலுவலகங்களும் அகண்ட அலைவரிசையுடன் இணைக்கப்படும். இதற்காக, தேவையான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு, சோதனை அடிப்படையில் ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை செயல்படுத்திட தேசிய தகவல் மையம் தற்போது நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**சோதனைச் சாவடிகள்**

போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டில் மொத்தம் 20 சோதனைச் சாவடிகள் இயங்கிவருகின்றன. தற்பொழுது கணினிமயமாக்குதல் திட்டத்தின் கீழ் 8 சோதனைச் சாவடிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றின் நடவடிக்கைகள் கணினிமயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றில் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தாலுக்காவில் உள்ள "பெத்திகுப்பம்" சோதனைச் சாவடியில் கணினிகள் மற்றும் கணினி மென்பொருள்கள் நிறுவப்பட்டு சோதனை அடிப்படையில் இயங்கிக் கொண்டுவருகிறது.

**இணையதளம் மூலம் தகவல் அறிதல்**

கணினிமயமாக்குதலின் மூலம் போக்குவரத்துத் துறை சம்பந்தமாக இணையதளம் மூலம் (e-Services Website) மக்கள் கீழ்க்கண்ட தகவல்களை அறிந்து கொள்ள வழிவகுக்கப்பட்டுள்ளது.

1. வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சென்று சேவையை பெருவதற்கான நேரத்தை முன்கூட்டியே பதிவு செய்தல்
2. இணையதளத்தின் வாயிலாக குறைகளை பதிவு செய்தல்
3. இணையதளத்தின் வாயிலாக குறை களைதலை அறிந்து கொள்ளுதல்.

தற்பொழுது அனைத்து போக்குவரத்து அலுவலகங்களை இணையதளத்தின் மூலம் இணைக்கப்படும் பணி நடைபெற்று வருகிறது, இப்பணி முடிவடைந்தவுடன் முக்கிய தகவல்கள் அனைத்தையும் மக்கள் இணையதளம் மூலம் எளிதில் அறிந்து கொள்ள இயலும்.

1. ஒரு வாகனத்தின் பதிவுகளை பற்றிய விவரங்களை அறிதல்
2. ஒரு ஓட்டுனர் உரிமம் பற்றிய பதிவுகளை அறிதல்
3. வாகனங்களின் அனுமதிச் சீட்டு (Permit details) பற்றிய விவரங்களை அறிதல்

4. ஒவ்வொரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் / பகுதி அலுவலகத்தின் வரையறுக்கப்பட்ட பரப்பு விவரங்கள் (Jurisdiction) பற்றி அறிதல்

5. களவாடப்பட்ட மற்றும் தொலைந்துபோன வாகனங்களின் தகவல்கள் மற்றும் அதன் விவரங்களை அறிதல் ஆகிய மேற் கூறிய விவரங்கள் இணையதளத்தில் சேர்க்கப்பட உள்ளது. தற்பொழுது இச்சேவைகள் அனைத்தும் போக்குவரத்து அலுவலர்கள் பயன்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

6. இவ்விவரங்கள் மக்களுக்கு அதிக பயனுள்ளதாக அமையும். தற்பொழுது போக்குவரத்து துறையை சார்ந்த அனைத்து வட்டார போக்குவரத்து அலுவலகங்களும் மற்றும் பகுதி அலுவலகங்களும் அகண்ட அலைவரிசை மூலம் இணைக்கப்பட்டு தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் தகவல் பரிமாற்றம் செய்யப்பட்டுவருகிறது. விரைவில் போக்குவரத்துதுறையுடன் பிற துறைகளான காவல்துறை குற்ற ஆவணகூடம் மற்றும் இதர துறைகளுடனும் தகவல்கள் இணையதளம் மூலம் பரிமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9